

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – III


பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

362. **வி. வசுமதி** 1753
திருவிளையாடற் புராணத்தில் திருவாசகக் கூறுகள்

363. **இரா. அபிமன்யு** 1759
எட்டுத்தொகையில் பாலைத்திணை பாடுபொருள்

364. **முனைவர் மு. கலைவேந்தன்** 1764
ஔவையாரின் நல்வழிப்பாடல்களின் பாடுபொருளும் பயன்பாடும்

365. **முனைவர் ஸ்ரீ. உமா** 1769
கொங்கு நாட்டு வாழ்வியல் கூறுகளான தாலாட்டில் "தாய்-சேய் உறவு"

366. **முனைவர் ஜோ. சரவணன்** 1773
கண்ணதாசனின் கவிதைகளில் அறிவியல் பாடுபொருள்

367. **மா. நாகராசன்** 1779
கம்பராமாயணம் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

368. **முனைவர் ப. பெரியசாமி** 1784
பிள்ளைத்தமிழும் காலந்தோறும் பாடுபொருள் மாற்றமும்

369. **முனைவர் சௌ. கீதா** 1790
சீவகசிந்தாமணியில் தொன்மங்கள்

370. **முனைவர் நா. பழனிவேலு** 1794
சீவகசிந்தாமணியில் 'காமவின்ப' ஒழிப்புச் சிந்தனைகள்

371. **சு. உமாராணி** 1799
சங்க இலக்கியத்தில் இயற்கை

372. **முனைவர் கு. முத்துக்குமார்** 1804
உலக இலக்கியங்களில் சிலம்பின் ஒலி - பேராசிரியர் ப.மருதநாயகம் ஆய்வை முன் வைத்து

373. **முனைவர் கே. ஈஸ்வரி** 1809
சங்க இலக்கியங்கள் காட்டும் பண்பாடு

374. **முனைவர் ச. பாலமுருகன்** 1814
பழங்குடி மக்களும் வரலாறும்

375. **முனைவர் வ. ஜெயா** 1820
மகாபாரதத்தில் துரியோதனன்

376. **முனைவர் க. முருகேசன்** 1825
தமிழன்பனின் புத்திலக்கியப் பாடுபொருள் நெறிகள்

# 363. எட்டுத்தொகையில் பாலைத்திணைப் பாடுபொருள்

முனைவர் இரா. அபிமன்யு
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் - 641 029.

எட்டுத்தொகையில் புறநானூறும் பதிற்றுப்பத்தும் புற நூல்கள். பரிபாடலில் அகப்பாக்களும் புறப்பாக்களும் விரவியுள்ளன. ஆனால் அதிலுள்ள அகப்பாக்கள் யாவும் குறிஞ்சி, மருதத்திணைச் சார்ந்தனவேயன்றிப் பாலைத்திணை சார்ந்தவை அல்ல. பிற ஐந்து அகநூல்களிலும் (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு) பாலைத் திணைப்பாக்கள் உண்டு. அவற்றின் பாடுபொருளைப் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

எட்டுத்தொகையில் பாலைத்திணைப்பாக்கள் தம் வருணைப்பகுதிகளால் சிறப்புடையவை. பாலைநில வருணனையும், முதுவேனிற்கால, இளவேனிற்கால வருணனைகளும்,சிறப்புற அமைந்து உரிப்பொருளைச் சிறப்பிக்கின்றன. நீண்டபாக்களாக அமைவது பாலை வருணனையை நன்கு செய்ய உதவுவதால், கலித்தொகையில் பாலைப்பாக்கள் சிறப்பாக அமைந்துள்ளன. அதற்கடுத்தால் போல் குறுந்தொகையின் பாலைப்பாடல்கள் உணர்ச்சியடிப்படையில் தலையாயச் சிறப்பினைப் பெறுகின்றன. இவற்றிற்கு அடுத்த நிலையில் மற்ற அகப்பாடல் திணைகள் அமைவதை உணரலாம்.

## பாலைப்பாடல்களின் பொதுவான செய்திகள்

- தலைமகன் பிரியப்போவதை எண்ணித் தலைமகள் வருந்துதல்.
- அவனுக்குத் தோழி அறிவுறுத்திச் செலவினைத் தவிர்த்தல்.
- பிரிந்த தலைவனை எண்ணி தலைவி கலங்குதல்.
- பிரிந்த தலைமகன் இடைச்சுரத்தில் தலைவியை நினைத்தல்.
- தலைவனைப் பிரிந்த தலைமகளுக்குத் தோழி ஆறுதல் கூறுதல்.
- உடன்போக்கின்போது தலைவிக்குத் தலைவன் ஆறுதல் உரைத்தல்.
- உடன்போகிய வழிச் செவிலி இரங்குதல்.
- செவிலிக்குப் பிறர் ஆறுதல் கூறல்.
- தலைவன் திரும்புவதைத் தோழி தலைவிக்கு உரைத்தல்.

போன்ற வகையில் பாலைத்திணையின் பாடுபொருள்கள் அமைகின்றன.